திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு இத்திட்டத்தை அமுல் நடத்துவது போன்று, இதன் பக்கத்தில் இருக்கக் கூடிய, வேறுசில தொழிலாளர்கள் இருக்கக்கூடிய பகுதிகளையும் இந்த திட்டத்தின்கீழ் கொண்டு வர, குறிப்பாக தக்கலை, மேட்டுக்கலை போன்ற இடங்களிலுள்ள தொழிலாளர்களையும், இதன்கீழ் கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக கவனிக்கலாம்.

* வினா எண் 307—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இ.எஸ்.ஐ. திட்டம் 1982 ஆம் வருடத்தில் எந்தெந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் ?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தின் எந்தெந்த பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இ.எஸ்.ஐ. திட்டத்தை கீழ்க்கண்ட பகுதிகளுக்கு விஸ்தரித்து அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன :—

(1) திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டம்.
(2) மானாமதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.
(3) வீரவநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்.
(4) உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்.
(5) அரியூர், வட ஆற்காடு மாவட்டம்.
(6) செங்குன்றம், செங்கல்பட்டு மாவட்டம்.
(7) ஒசூர், தர்மபுரி மாவட்டம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாஜா பகுதிக்கு இத்திட்டத்தை நீட்டிக்கும் ஆணை விரைவில் வெளியிடப்படும்.

(ஆ) கன்னியாகுமரி புறநகர் பகுதிக்கு ஈட்டுறுதி திட்டம் விரிவு படுத்தப்பட்டு 25–4–1982 முதல் செயல்பட்டு வருகின்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழத்தாழ 25,000-க்கும் அதிகமான முந்திரித் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதேபோல் கயிறு தொழிலிலே ஈடுபட்டிருக்கக்

கூடிய பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அதேபோல மெக்கானைஸ்டு பேக்டரியும் அங்கே இருப்பதன் காரணமாக அதில் பணிபுரியும் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். ஆகவே, அந்தப்பகுதியிலுள்ள தொழிலாளர்களையும் இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி ஆழ்ந்து பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் கொண்டு வந்திருக்கும் பகுதிகளில் ஆரல்வாய்மொழி பகுதியில் உள்ள நூற்பு ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் மருத்துவ வசதிகள், இன்றையதினம் அருகில் உள்ள மருத்துவமனைகளிலிருந்து மொபைல் வேன் மூலமாக வழங்கப்படுகிறது. அது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, அந்தத் தொழிலாளர்களுக்கு அந்தப் பகுதிகளிலேயே, அதாவது ஆரல்வாய் மொழி, தக்கலை போன்ற பகுதிகளிலேயே தனியாக, தொழிலாளர் நல மருத்துவமனைகளை, இந்த ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னவாறு படிப்படியாக விரிவாக்கிக் கொண்டு வரும்போது, அவ்வப் போதுள்ள நிதி நிலைமைகளுக்கு ஏற்ப மத்திய அரசினுடைய அந்தக் கழகத்தின் ஒப்புதலுக்கேற்ப இந்த திட்டம் அந்தப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1982 ஆம் வருடத்தில் ஈ.எஸ்.ஐ, திட்டம் விஸ்தரிக்கப்படும் பகுதிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் வீரவநல்லூரும் ஒன்று. திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டை என்னுமிடத்தில் இருக்கக்கூடிய மருத்துவமனையிலிருந்துதான் ஒரு ஊர்தி மூலமாக அந்த வீரவநல்லூர் பகுதி தொழிலாளி மக்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அது போதுமானதல்ல. சரியுமல்ல. ஆகவே குறிப்பாக வீரவநல்லூர், பகுதியிலேயே ஒரு மருத்துவமனையை இந்த இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் அமைக்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றியும் நிதானமாக பரிசீலிக்கலாம்.